# ஆய்வுச் சுருக்கம்

"க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் பாடசாலையை விட்டு மாணவர்களின் இடைவிலகல்: தெஹியோவிற்ற கல்வி வலய தோட்டப்புறப் பாடசாலைகள்". எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது தோட்டப்புறப் பாடசாலைகளில் தரம் 11 வரை கல்வியைத் தொடர்ந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றாமலிருப்பதற்கான காரணங்களை இனங்கண்டு பரீட்சைக்குத் தோற்றத் தவறும் மாணவர்களின் எண்ணிக்கையை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தலை பிரதான குறிக்கோளாகக்கொண்டுள்ளது.

இவ்வாய்வின் ஆய்வு வடிவமாக "அளவீட்டு ஆய்வு வடிவம்" பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசமாக சபரகமுவ மாகாணத்திலுள்ள தெஹியோவிற்ற கல்வி வலயம் தெரிவுசெய்யப்பட்டது. இவ்வலயத்திலுள்ள இடைநிலைவகுப்புக்களைக் கொண்ட 10 தோட்டப்புறப் பாடசாலைகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களில் (2012-2016) இப்பாடசாலைகளிலிருந்து தரம் 11 வரை கற்றும் க.பொ.த. (சா/த) தோற்றமுன் இடைவிலகிச் சென்ற 216 மாணவர்களில் 108 மாணவர்கள் எளிய எழுமாற்று மாதிரி (Simple Random Sampling) முறையை பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 10 பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலைக்கு இருவர் வீதம் 20 ஆசிரியர்கள், பாடசாலைக்கு இருவர் வீதம் இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர் 20 பேர் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுக் கருவிகளாக மாணவர் வினாக்கொத்து மற்றும் அதிபர், ஆசிரியர், பெற்றோர் நேர்காணல் படிவம் என்பன பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு சமூகவிஞ்ஞான ஆய்வுகளுக்கான தரவுப்பகுப்பாய்வு மென்பெருள் (SPSS) இனை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது.

ஆய்வு முடிவுகளாக பாடசாலைக்கு குறைவாக சமூகமளித்தல், பாடங்களை விளங்கிக்கொள்வதில் ஏற்படும் சிரமம், படித்த பாடங்களை மீட்டாமலிருத்தல், போன்ற தனிப்பட்ட காரணிகளும். குடும்ப வருமானம் குறைவு, குடும்ப வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, சகோதர-சகோதரிகள் கல்வியை தொடர்ந்துகொண்டிருந்தமை போன்ற குடும்ப காரணிகளும் போக்குவரத்துச் சிரமம், துணைக்கு யாரும் இல்லாமை, பாதுகாப்புக்குறைவு, போன்ற பாடசாலைக் காரணிகளும் மாணவர்களது இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதாகவும் அதனால் அவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் கண்டறியப்பட்டது. அத்தோடு, அவர்கள் தொடர்ந்தும் வெவ்வேறு துறைகளில் கல்வி கற்பதற்கு ஆர்வமாக இருப்பதுவும் கண்டறியப்பட்டது.

கண்டறியப்பட்ட இவ்விடயங்களின் அடிப்படையில் ஆலோசனைகளும், எதிர்கால ஆய்வுக்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## Abstract

The Study, 'Dropout of Students from School Prior to sit G.C.E (O/L) Examination: Special Reference to Estate Schools in Dehiowita Educational Zone' is aimed to investigate the factors that contribute to the dropout and find the solution to reduce it.

The study was guided by the following objectives; to identify the personal, family and school factors which contribute to pupils drop out from G.C.E (O/L) classes, to investigate the Challenges faced by dropouts, to find out the drop out's perception on continuing their education.

The sample consisted 50% of dropout students (108) during five years (2012-2016), 10 principals, 20 teachers and 20 parents from ten Tamil medium estate secondary schools. The study adopted simple random Sampling technique to sample its respondents. The questionnaire was administered to the sample of students and 86 students responded to the questionnaire correctly while principals, teachers and parents are interviewed directly. The responses were tabulated by using SPSS and analyzed.

The research found out the personal factors which lead to drop out. They are poor attendance, poor academic performance, not revising lessons, low interest in studies, classmates' dropout, family factors like less family income, high cost of living, family jobless, family members' dropout, looking after siblings, low educational level of parents and engaging in household work. The school factors which lead to drop out were distance of school, Corporal punishment, more home works, poor motivation, late return and security issues.

Also the research findings indicate that dropout students facing more challenges in their economic and social life. Furthermore, the finding points out that all dropout students have positive perception in continuing their studies in different sectors.

By the findings of the study recommendations are presented and areas are suggested for further study.